# தலைவாசல்
Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 51 | thalaivaasaltv@gmail.com | திங்கட்கிழமை | நவம்பர் 23, 2020


## மாவீரர் நினைவேந்தலவே மரங்களை நடுகிறார் ஐங்கரநேசனுக்கும் வழக்கு




வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சரும் தமிழ் தேசிய பசுமை இயக்க தலைவருமான ஐங்கரநேசனுக்கு எதிராக கோப்பாய் பொலிஸார் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

மாவீரர் தினம் தொடர்பில்

03

## கிளிநொச்சி வியாபாரிக்கு கொரோனா தொற்று மறு அறிவித்தல்வரை பாடசாலைகளுக்கு பூட்டு

கிளிநொச்சியில் 72 வயதுடைய வயோதிபர் ஒருவருக்கு கோரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

“கிளிநொச்சி 55ஆம் கட்டையில் உள்ள ஒயில் கடை நடத்தும் வியாபாரி ஒருவருக்கு நேற்று காய்ச்சல் என்று வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு கோரோனா தொற்று

03


## மோட்டார் சைக்கிளுக்கு தீ வைப்பு வீடு புகுந்து விஷமிகள் அட்டகாசம்



யாழ்.வட்டுக்கோட்டை - மூளாய் பகுதியில் வீடொன்றில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை விஷமிகள் தீயிட்டு கொழுத்தியிருக்கின்றனர்.

குறித்த சம்பவம் நேற்று நள்ளிரவு 12 மணியளவில் வீட்டில் உள்ள அனைவரும் அயர்ந்து தூங்கிய பொழுது இடம்பெற்றுள்ளது.

03



## நெருங்கிவரும் நிவர் புயல்!

### அனர்த்த முகாமைத்துவ பிரிவு தயார் நிலையில்

யாழ் மாவட்டத்தில் தாழமுக்கத்தினால் ஏதாவது அனர்த்தம் ஏற்படுமாயின் அதனை எதிர்கொள்ள மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தயார் நிலையில் உள்ளதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க மகேசன் தெரிவித்தார்.

தற்போது தாழமுக்கம் காரணமாக விடுக்கப்பட்டுள்ள சிவப்பு எச்சரிக்கை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு வளிமண்டலவியல் திணைக்களத்தின்அறிவுறுத்தல் ஒன்று கிடைத்திருக்கின்றது. இன்று தொடக்கம்

03



## வடக்கு கிழக்கு கரையோரப் பகுதிகளை 24 மணி நேரத்தில் நிவர் புயல் தாக்கும்

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட கரையோர பகுதிகளை இன்னும் 24 மணிநேரங்களில், சூறாவளி தாக்குமென்று, வழிமண்டல ஆராய்ச்சி திணைக்கத்தின் யாழ். பிராந்திய பொறுப்பதிகாரி பிரதீபன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், சூறாவளியால் ஏற்படவுள்ள காற்றின் வேகம், கடும் மழை, இடி, மின்னல் தாக்கங்களில் இருந்து பொது மக்களும் கடற்றொழிலாளர்களும் தங்களை

03

## உறவுகளை நினைவுகூர மறுப்பது அப்பட்டமான மனித உரிமை மீறல்



“போரில் உயிரிழந்த தமது உறவுகளை வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் நினைவுகூர அனுமதி மறுப்பது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.”

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் கொழும்பு மாவட்ட

03

## மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு தடை கோரும் வழக்கு பின்வாங்கியது பொலிஸ்

மாவீரர்நாள் நினைவேந்தலை முன்னெடுப்பதற்கு தடை கோரி யாழ்ப்பாணம் பருத்தித்துறை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மூன்று வழக்குகளை பொலிஸார் மீளப் பெற்றுள்ளனர்.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நெல்லியடி பொலிஸ் நிலையங்களின் அதிகாரிகள் மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு தடை கோரி பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இன்று வழக்கு விசாரணைக்காக பதில் நீதிபதியால் எடுத்துக்கொள்ளப்பட்டு நிரந்தர நீதிபதி இன்று விடுமுறையில்

03

## புலிகளை நினைவுகூர மக்களை அணி திரட்டுகிறார்

### வலி கிழக்கு தவிசாளருக்கு எதிராக தொடர்ச்சியாக வழக்குப் பதிவு



வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் புலிகளை நினைவு கூர்ந்து மாவீரர் தின பொதுக்கூட்டத்தினை ஏற்பாடு செய்துவருகின்றார் என,

புலனாய்வுத்துறையினருக்கு தகவல் கிடைத்திருப்பதாக தெரிவித்து பொலிசாரினால்

03






**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

# யாழ்ப்பாண மக்கள் சட்டங்களை மதிப்பவர்கள்

யாழ்ப்பாணம் மக்கள் சட்டங்கள், சுகாதாரக் கட்டுப்பாடுகளை மதித்து நடந்து கொள்வதில் சிறந்தவர்கள் என்பதை நான் நேரில் கண்டுகொள்கின்றேன். கோவிட் -19 நோய் தொற்று கட்டுப்பாட்டுகளை யாழ்ப்பாணம் மக்களே சரியாகக் கடைப்பிடிக்கிறார்கள் என யாழ்ப்பாணம் இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கோவிட் -19 நோய்த் தொற்று நடவடிக்கைகளில் யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் தெரிவித்ததாவது

யாழ்ப்பாணம் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியாக நான் பொறுப்பேற்று மூன்று மாதங்கள் ஆகின்றன. நான் தென்பகுதியிலும் பல மாவட்டங்களில் இராணுவத்தின் உயர் பதவிகளில் கடமையாற்றியிருக்கின்றேன். அந்த மாவட்ட மக்களை விட யாழ்ப்பாணத்தை



பொறுத்தவரை மக்கள் ஒழுக்கத்தில் சிறந்தவர்களாகவே நான் நேரடியாக பார்க்கின்றேன்.

குறிப்பாக தற்போதைய கோவிட் -19 நோய்த் தொற்று சூழ்நிலையில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு அறிவித்தல் வழங்கும் போது அவற்றைப் பின்பற்றி ஒத்துழைக்கின்றனர்.

இதை நான் பெருமையாக கூறிக் கொள்ள விரும்புகின்றேன். தென்னிலங்கையில் மக்களைக் கட்டுப்படுத்துவதில் முப்படைகளும் பொலிஸாரும் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிலை காணப்படுகிறது.

சுகாதார நடைமுறையை தொடர்ச்சியாக பேணுவதன் மூலம் உலக நாடுகளை அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள கோரோனா வைரஸிலிருந்து எமது மாவட்டத்தினைக் காப்பாற்ற முடியும்.

சுகாதார பிரிவினரால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார நடை முறைகளை மக்கள் கடைப்பிடிப்பதனால் எமது மக்களையும் எமது பிரதேசத்தையும் காப்பாற்ற முடியும். எனவே யாழ்ப்பாண மக்கள் குறித்த சுகாதார நடைமுறையினை தற்போது நீங்கள் எவ்வாறு கடைப்பிடிக்கிறீர்களோ, அதனை தொடர்ச்சியாக பின்பற்றுவதன் மூலம் எமது பிரதேசம் கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்காத வண்ணம் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

மேலும் தென்னிந்தியாவிலிருந்து வடபகுதிக்கு சட்டத்துக்குப் புறம்பாக வருவோர் மற்றும் பொருள்களைக் கடத்தி வருவோர் தொடர்பிலும் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் கரையோரப் பகுதி மக்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் என்றார்.



## தினம் ஒரு ஆரோக்கிய தகவல்-6

**டெங்கு காய்ச்சல்**

டெங்கு காய்ச்சல் டெங்கு வைரஸினால் ஏற்படுத்தப்படும் தொற்றுநோயாகும்.

ஈடிஸ் பெண் நுளம்பினால் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குக் கடத்தப்படும்.

**அறிகுறிகள்:**

காய்ச்சல், தலையிடி, மூட்டு நோ, தசை நோ, என்பு நோ, கண்ணிற்கு பின்னான நோ, வாந்தி, குமட்டல், சிலவேளைகளில் முரசிலிருந்து, சிறுநீர், மலத்துடன் இரத்தம் வெளியேறல் அறிகுறிகள் இருப்பின் தாமதமின்றி அருகிலுள்ள அரச வைத்தியசாலைக்கு சென்று குருதிப் பரிசோதனை செய்ய வேண்டும்.

**வைத்திய கலாநிதி**
**கோ. றஜீவ்**

# மூன்றாம் தவணைக்காக பாடசாலைகள் திறக்கப்பட்டன!

மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களைத் தவிர ஏனைய அனைத்து பகுதிகளிலும் மூன்றாம் தவணைக்காக பாடசாலைகள் இன்று (திங்கட்கிழமை) ஆரம்பமாகியுள்ளன.

இதன்படி ஆறாம் வகுப்பு முதல் 13ஆம் வகுப்பு வரையில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

சுகாதார விதிமுறைமைகள் பின்பற்றப்பட்டு கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தொற்றுநோயியல் பிரிவின் தலைமை நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

எனினும் மாணவர் அல்லது பாடசாலை பணிக்குழாமில் எவரேனுக்கும் கொவிட் 19 தொற்றுக்கான நோய் அறிகுறிகள் காணப்பட்டால் பாடசாலைக்கு சமூகமளிக்காமல் இருக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேநேரம் பாடாசலைக்கு சமூகமளித்த எவரேனுக்கும் நோய் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக ஏனையவர்களுடன் விலகிச் சென்று தேவையான மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு அல்லது ஓய்வினை பெற வீடுகளுக்கு செல்ல வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, வெலிஓயா பகுதியில் கொவிட் 19 தொற்று உறுதியானவர்கள் அடையாளங்காணப்பட்டதை அடுத்து ஹட்டன் கல்வி வலயத்தில் மலைமகள் தமிழ் வித்தியாலயம், ஆக்ரோயா தமிழ் வித்தியாலயம் ஆகியன திறக்கப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே ஹட்டன் கல்வி வலயத்தில் உள்ள 83 பாடசாலைகளில் 81 பாடசாலைகளே இன்று திறக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குருநாகல் மாவட்டத்தில் பல பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படுவதை காலவரையின்றி ஒத்திவைக்க வடமேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லூரே தீர்மானம் எடுத்துள்ளார்.





# சுமந்திரனின் நகர்த்தல் பத்திரம் நிராகரிப்பு!

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தாக்கல் செய்த நகர்தல் பத்திரம் நிராகரிக்கப்பட்டதுடன் மன்னார் மாவட்டத்தில் மாவீரர் தினத்தை நினைவு கூறுவதற்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவும் நீடிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நீதிமன்றத்தினது தடை உத்தரவிற்கு எதிராக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் இணைந்து இன்றைய தினம் நகர்தல் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்திருந்தனர்.

மன்னார் நீதவான் எம்.கணேசராஜா முன்னிலையில் இன்று (திங்கட்கிழமை) காலை குறித்த வழக்கு விசாரணைகளுக்காக மன்னார் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் எம். கணேசராஜா குறித்த தடை உத்தரவை நீடித்துள்ளார்.

எனினும் குறித்த தடை உத்தரவை வழங்க நீதவான் நீதிமன்றத்திற்கு சட்டத்திலே நியாயதிக்கம் கொடுக்கப்படவில்லை என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மன்றில் சமர்ப்பணம் செய்திருந்தார்.

எனினும், நீதிமன்றத்திற்கு நியாயதிக்கம் இல்லாத நிலையிலும், சுகாதார நடை முறைகளைப்பின்பற்றி சுகாதார அதிகாரிகளின் அனுமதியுடன் குறித்த நினைவேந்தலை முன்னெடுப்போம் என மன்றில் குறிப்பிட்டபோதிலும் மன்னார் நீதவான் குறித்த தடை உத்தரவை நீக்க மறுத்துள்ளார்.

மேலும், தமிழீழ விடுதலைப்புலிகள் உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் தடை செய்யப்பட்ட இயக்கமாக இருக்கின்ற காரணத்தினால் குறித்த நிகழ்வுகளை நடாத்த முடியாது எனவும், கொரோனா வைரஸ் தொற்றுப்பரவல் ஆபத்தான நிலமையில் இருக்கின்றது.

இந்நிலையில், மக்கள் ஒன்று கூடினால் குறித்த தொற்று பரவக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றமையினாலும் ஏற்கனவே பொலிஸார் ஊடாக வழங்கப்பட்ட உத்தரவுகளை நீடிப்பதாகவும் நீதவான் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தனிமைப்படுத்தப்பட்ட சாரதி மீண்டும் கொழும்பிற்கு ஓட்டம்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த ஹயஸ் வாகன சாரதியை சுகாதார பிரிவினர் தனிமைப்படுத்தியபோதும் மறுநாளே அவர் மீண்டும் கொழும்புக்கு பயணமாகியுள்ளதாக மக்கள் குற்றஞ்சாட்டியிருக்கின்றனர்.

கொழும்பிலிருந்து யாழ்.கொக்குவில் பகுதிக்கு கடந்த 22 ஆம் திகதி இரவு கொக்குவில் கல்லூரி வீதியில் உள்ள வீடொன்றிற்கு வந்த ஹயஸ் வாகனம் சாரதி சுகாதாரப் பிரிவினரால் சுய தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் மறுநாள் 23 ஆம் திகதி இரவு கொழும்புக்கு சென்றுள்ளார். இந்த ஹயஸ் வாகனத்தில் வேறு எவரும் வந்தனரா என்பது தொடர்பில் தெரியவில்லை. வந்திருந்தால் அவர்கள் எங்கே இறங்கினர் என்பதையும் அறிய வேண்டும். இந்த விடயம் சம்பந்தமாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வாகன சாரதிக்கு கொரோனா தொற்று இருக்குமானால் நிலைமை மோசமாக இருக்கும் என்று அந்தப் பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## புலிகளை நினைவுகூர...

'பி அறிக்கையின்' பிரகாரம் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில்,

பயங்கரவாதத்தடைச்சட்டம் மற்றும் அதனோடு இணைந்த வர்த்தமானி அறிவத்தல்கள், கொரோனா சுகாதார ஏற்பாடுகளை மீறாதவகையில் செயற்பட வேண்டும் என மல்லாகம் நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ்க்கு எதிராக அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு,

இன்று திங்கட்கிழமை(23) மதியம் மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ் வழக்கில் தவிசாளருக்கு எதிராக, தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகளை நினைவு கூர்ந்து மாவீரர் நாளில் பொதுக்கூட்டம் ஒன்றினை,

தவிசாளர் ஏற்பாடு செய்வதாக புலனாய்வுத்துறையின் தகவல் தமக்குக் கிடைத்துள்ளதாக பொலிஸ் தரப்பில் இருந்து மன்றில் பி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இவ் வழக்கில் சட்டத்தரணி வி.திருக்குமரன் தலைமையில் சட்டத்தரணிகள் ஆஜராகினர். சட்டத்தரணிகள் இன்று வரையில் தவிசாளர் அப்படியொரு பொதுக்கூட்டத்தினையும் ஏற்பாடுசெய்யவில்லை எனவாதிட்டனர். அதேவேளை ஏதாவது ஒரு கூட்டத்தினை ஏற்பாடு செய்வதாயின் சட்டதிற்கு உட்பட்டு சுகாதார அனுமதிகளுடனேயே மேற்கெற்கொள்ளப்படும் எனவும் மன்றில் உத்தரவாதமளிக்கப்பட்டது.

இந்த இடத்தில் பொலிசாரினால் பி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நிலையில், பொலிசாரின் குற்றச்சாட்டுக்கள் மறுக்கப்பட்டுள்ளது. பொலிசாரும் குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்களை முன்வைக்கவில்லை என்பதை நீதிபதி தெரிவித்ததுடன் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களின் பிரகாரம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் பயங்கரவாதம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல், தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி செயற்பட்டால் நீதிமன்றின் உத்தரவைப் பெறாமலேயே கைது செய்ய பொலிசாருக்கு முடியும் எனவும் பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்கள், கொரோனா தொடர்பான சட்ட ஏற்பாடுகளையும் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அடுத்த தவணையில் குற்றச்சாட்டப்பட்டவரின் செயற்பாடு பற்றி பொலிஸாரினால் அறிக்கை சமர்ப்பிக்கவும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு எதிராக குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் பிரிவு 106(1) இன் கீழ் தடை உத்தரவு ஒன்றினைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் நாளை செவ்வாய்கிழமை தாக்கல் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## நெருங்கிவரும்...

24, 25 ஆம் திகதி வரை அவதானமாக மீனவர்களை கடலுக்குச் செல்லும் படியும் அதே நேரத்தில் கிழக்கு பகுதியில் ஏற்பட்ட தாழமுக்கம் சற்று உக்கிரமடைந்து புயலாக மாறக்கூடிய நிலை காணப்படுவதனால் அவதானமாக செயல்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி 24 25 ஆம் திகதிகளில் 100-150 மில்லி மீட்டர் மழை பெய்யக்கூடும் கடும் காற்று வீசும் எனவும் 24 25 ம் திகதி வடக்கு மாகாணத்திற்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே கடற்தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் மிக அவதானமாக தங்களுடைய செயற்பாடுகளை முன்னெடுத்தல் அவசியம். அனர்த்த முகாமைத்துவ பிரிவினுடைய அறிவுறுத்தலையும் வளிமண்டலத் திணைக்களத்தினுடைய அறிவுறுத்தலையும் பின்பற்றி தங்களுடைய கடற் தொழில்செயற்பாடுகளை செயற்படுத்தப்படுத்தல் வேண்டும்.

கடல் குழப்பமாக இருப்பதனால் குறிப்பாக நெடுந்தீவுக்கான கடல் பயணமும் கடல் குழப்பம்,கடும் காற்றின் காரணமாக தடைப்பட்டிருப்பதாக பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும்படகுப் போக்குவரத்தினை நிலமையினை அனுசரித்து செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

கிழக்கு கடற் பகுதியில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் வட பகுதியில் ஏதாவது அனர்த்தம் ஏற்படுமாக இருந்தால் அதனை எதிர்கொள்வதற்குரிய ஏற்பாடுகள் அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனினும் வடக்கில் கரையோரப் பகுதிகளில் மக்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும். அத்தோடு தங்களுடைய பிரதேசத்தில் ஏதாவது இடர்பாடுகளை அர்த்தம் ஏற்படுமாயின் உடனடியாக அனர்த்த முகாமைத்துவ பிரிவினரை தொடர்பு கொள்வதன் மூலம் அதற்குரிய நடவடிக்கைகளை அனர்த்த முகாமைத்துவ பிரிவு முன்னெடுக்கும் எனவும் அரச அதிபர் தெரிவித்தார்.

## உறவுகளை நினைவுகூர...

நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கோட்டாபய ராஜபக்ச, ஜனாதிபதியாக இருக்கும் வரைக்கும் தமிழர்களின் நினைவேந்தல் உரிமைக்கு இடமில்லை என்று,

ஆளுங்கட்சியினர் வீரவசனம் பேசுவது, இது கடும்போக்குவாத இனவாத - எதேச்சதிகார அரசு என்பதை வெளியுலகத்துக்கு எடுத்துக் காட்டுகின்றது.

பெரும்பான்மையான சிங்கள மக்களின் வாக்குகளாலேதான் ஜனாதிபதியாக வந்தேன் என்ற இறுமாப்பு கோட்டாபய ராஜபக்சவின் மனதில் இருக்கும் வரைக்கும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை அவர் தலைமையிலான அரசு தொடர்ந்து முன்னெடுத்தே செல்லும். இதற்குக் காலம்தான் பதில் சொல்லும்.

இன, மத, மொழி ஒற்றுமைகளைச் சிதறடிக்கும் இந்த அரசின் ஆட்சிக்குப் பாடம் புகட்ட ஒட்டுமொத்த நாட்டு மக்களும் ஓரணியில் திரள வேண்டும்" - என்றார்.

## வடக்கு கிழக்கு...

பாதுகாத்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்.

தற்போது வங்காள விரிகுடாவில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்தம், எதிர்வரும் 6 மணித்தியாலங்களில் தாழமுக்க வலையமாக மாற்றமடையும் சாத்தியமாக உள்ளதெனத் தெரிவித்த அவர், இது 24 மணித்தியாலங்களில் சூறாவளியாக மாற்றமடையக்கூடிய சாத்தியமும் உள்ளதெனவும் கூறினார்.

'இது தற்போது வடமேற்கு திசையாக நகர்ந்து, இலங்கையின் வடக்கு - கிழக்கு கரையோகத்தை அண்மிக்கும் சாத்தியக்கூறு உள்ளது. இதனால் வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் பல இடங்களில் கடும் மழை, சில இடங்களில் 100 தொடக்கம் 150 மில்லிமீற்றர் மழையும் பெய்யக்கூடும்.

'இது மட்டுமல்லாது, நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஆங்காங்கே மழை பெய்யக்கூடிய சாத்தியம் உள்ளது. மேலும், சில பிரதேசங்களில் 60 தொடக்கம் 70 கிலோமீற்றர் வரையான வேகத்தில் காற்று வீசும்' எனவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை நிவர் புயல் கரையைக் கடக்கும் இடம் தொடர்பாக இன்னமும் குழப்பநிலை காணப்படுவதாகத் தெரிவித்திருக்கும் யாழ்.பல்கலைகழக புவியியல்துறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா பெரும்பாலும் தமிழ்நாட்டின் மாமல்லபுரத்திற்கும் காரைக்காலுக்கும் இடையில் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்பதாகவும் சில மாதிரிகளில் புயல் யாழ்ப்பாண குடாநாட்டினை ஊடறுத்து (புயலின் மையம் யாழ்ப்பாணத்திலும் மற்றும் வடமராட்சி கிழக்கிலும் உள்ளது) நாகப்பட்டினத்தில் கரையைக் கடக்கும் எனக் காட்டுவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

இது குறித்து மேலும் தெரிவித்த அவர்,

வங்காள விரிகுடாவில் தற்போது நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக வடக்கு மாகாணத்திற்கு தற்போது கிடைக்கின்ற மழைவீழ்ச்சி தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாளை காலை முதல் மிக அதிகளவான மழைவீழ்ச்சி கிடைக்க தொடங்கும். நாளை நண்பகலுக்கு பின்னர் இவ் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலை புயலாக (நிவர்) மாற்றமடையும்.

தற்போதுள்ள குளிரான வானிலை நாளையும் நாளை மறுதினமும் இன்னமும் குளிராக மாற்றமடையும்.

புயலின் கரையைக் கடக்கும் இடம் தொடர்பாக இன்னமும் குழப்பநிலை காணப்படுகின்றது. பெரும்பாலும் தமிழ்நாட்டின் மாமல்லபுரத்திற்கும் காரைக்காலுக்கும் இடையில் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சில மாதிரிகளில் புயல் யாழ்ப்பாண குடாநாட்டினை ஊடறுத்து (புயலின் மையம் யாழ்ப்பாணத்திலும் மற்றும் வடமராட்சி கிழக்கிலும் உள்ளது) நாகப்பட்டினத்தில் கரையைக் கடக்கும் எனக் காட்டுகிறது. ஆனால் இது உறுதியானதல்ல - என்றார்.

## மாவீரர் நாள்...

உள்ளமையால் வழக்கினை ஒத்திவைப்பதாக அறிவித்தவேளை,

மூன்று பொலிஸ் நிலையங்களையும் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் தாங்கள் குறித்த வழக்குகளை மீளப் பெறுவதாக மன்றுக்கு அறிவித்தனர்.

இதன் அடிப்படையில் பருத்தித்துறை நீதிமன்றில் மாவீரர்நாள் நினைவேந்தலுக்கு தடை உத்தரவு வழங்கப்படவில்லை என்று மன்றின் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

## மோட்டார் சைக்கிளுக்கு...

மோட்டார் சைக்கிளின் உரிமையாளரால் இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன்

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மாவீரர் நினைவேந்தவே...

கோப்பாய் பொலிஸார் யாழ்ப்பாண நீதிமான் நீதிமன்றில் இந்த வழக்கை தொடுத்துள்ளனர்.

இந்த வழக்குககான தடையுத்தரவை பெற்றுக்கொள்வதற்காக நாளை செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்துக்கு சமூகமளிக்குமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ் அரசடி வீதியிலுள்ள தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைமை அலுவலகத்திற்கு இன்று மாலை சென்ற போலீசார் நாளை நீதிமன்றுகது சமூகமளிக்குமாறு அறிவித்தலை கொடுத்துவிட்டுச் செல்லும் சென்றுள்ளனர்.

## கிளிநொச்சி வியாபாரிக்கு...

இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவரது மாதிரிகள் பெறப்பட்டு பிசிஆர் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன.

அத்துடன், அவரது குடும்பம் தனிமைப்படுத்தப்பட்டது. அவருக்கு கோரோனா தொற்று உள்ளமை பிசிஆர் பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர் கிளிநொச்சியில் அண்மைய நாள்களில் நடமாடிய இடங்கள் மற்றும் தொடர்புகொண்டவர்களைக் கண்டறிவதில் சிக்கல் உண்டு. அதுதொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதனால் அவரது கடைக்கு அண்மையாக உள்ள கடைகளை மூடி தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அத்துடன் பாடசாலைகளை மூடுமாறும் கேட்டுள்ளோம்" என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

இதனிடையே கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் அனைத்தும் நாளை (நவ. 24) செவ்வாய்க்கிழமை தொடக்கம் மறு அறிவித்தல் வரை மூடப்படுவதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் கோரோனா தொற்றாளர் ஒருவர் இன்று கண்டறியப்பட்ட நிலையில் சுகாதாரத் துறையின் கோரிக்கைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# கொரோனா மரணம் 87ஆக உயர்வு!

நாட்டில் மேலும் நால்வர் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு பகுதியைச் சேர்ந்த இரு ஆண்கள் மற்றும் இரு பெண்களே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நாலக கலுவெவ உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன்படி, கொழும்பு-15 பகுதியைச் சேர்ந்த 70 வயதான பெண், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் நேற்று இடம்பெற்ற நிலையில், கொவிட் தொற்றுடனான நிமோனியா நிலையே குறித்த பெண்ணின் இறப்புக்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்பு-12 பகுதியைச் சேர்ந்த 53 வயதான ஆணொருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்றுள்ளதுடன் மரணத்திற்கான காரணம் கொரோனா தொற்றையடுத்து நாட்பட்ட நுரையீரல் நோய் அதிகரித்தமையேயாகும்.

அதேபோல், பொரளை பகுதியைச் சேர்ந்த 84 வயதான பெண், அவரது வீட்டில் நேற்று 21ஆம் திகதி உயிரிழந்துள்ளார். கொரோனா தொற்றையடுத்து ஏற்பட்ட நிமோனியா நிலைமையே மரணத்திற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு-10 பகுதியைச் சேர்ந்த 75 வயதான ஆணொருவர்



கொரோனா தொற்று கண்டறியப்பட்ட நிலையில் ஐ.டி.எச். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இவர், தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளதுடன் கொரோனாவுடனான நிமோனியா நிலைமை அதிகரித்தமையே இவரின் மரணத்துக்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 87ஆக அதிகரித்துள்ளது.

# இலங்கையில் ஒரேநாளில் அதிக மரணங்கள் பதிவாக காரணம் இதுவா?

உயிரிழப்புகளின் பின்னர் பி.சி.ஆர். முடிவுகளைப் பெற்றுக்கொள்ள சற்று தாமதமாவதனால் உயிரிழப்புகள் தொடர்பாக அறிவிப்பதற்கும் கால தாமதமாகிறது என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் கடந்த சில நாட்களாக அதிகளவான கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. குறிப்பாக கடந்த சனிக்கிழமை கொரோனா வைரஸினால் 9 மரணங்கள் பதிவாகியதாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், பி.சி.ஆர். முடிவுகளைப் பெற்றுக்கொள்ள சற்று தாமதமாவதனால் மரணங்கள் பதிவாகிய அன்றைய தினமே அவை தொடர்பில் அறிவிக்க முடியாததால், அனைத்தையும் சேர்த்து வெளியிடும் போது மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதைப் போன்று தென்படும் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பிரதானி விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

சனிக்கிழமை அறிவிக்கப்பட்ட 9 மரணங்களில் 4 மரணங்கள் அன்றைய தினம் ஏற்பட்டவை என்றும் ஏனைய 5 மரணங்களில் நான்கு 20ஆம் திகதியும் மற்றொன்று 19ஆம் திகதி ஏற்பட்ட மரணமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறிருப்பினும் நாட்டு மக்கள் அனைவரும் தொடர்ந்தும் சுகாதார விதிமுறைகளை கடுமையாக பின்பற்ற வேண்டும் என வலியுறுத்திய அவர், வீடுகளில் முதியோர் அல்லது நாட்பட்ட நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இருப்பார்களாயின் அவ்வாறானவர்கள் சமூகத்திற்கு வருவதை இயன்றளவில் குறைத்துக்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிவித்தல் போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளுக்கு மாத்திரமல்ல என்பதுடன், முழு நாட்டுக்கும் பொறுத்தமானதாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக அபாயம் மிக்க பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள மேல் மாகாணத்திலுள்ள மக்கள் இதனை கடுமையாக பின்பற்ற வேண்டியது அவசியமாகும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# ஹற்றனில் இரு பாடசாலைகளுக்கு பூட்டு

நாடளாவிய ரீதியில் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் இன்று (திங்கட்கிழமை) காலை ஆரம்பமான நிலையில், மலையகத்திலுள்ள பாடசாலைகளிலும் கல்விச் செயற்பாடுகள் சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் ஆரம்பித்துள்ளன.

மாணவர்கள் முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளியைப் பின்பற்றி அச்சமின்றி வழமைபோல் பாடசாலைகளுக்கு வந்திருந்தாலும், மாணவர்களின் வருகையில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது என ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

மாணவர்கள் பாடசாலை வளாகத்துக்குள் வந்ததும் அவர்களின் உடல் வெப்பநிலை பரிசோதிக்கப்பட்டு, கைகளை கழுவிய பின்னர் வகுப்பறைக்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மேலும், வகுப்பறையில் சமூக இடைவெளியைப் பின்பற்றும் விதத்தில் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. எனினும் ஒரு சில பாடசாலைகளில் இதனை காணமுடியவில்லை. வளப்பற்றாக் குறையே இதற்கு காரணம்.

நாட்டில் 10 ஆயிரத்து 165 அரச பாடசாலைகளில் தரம் 6 முதல் தரம் 13 வரை உள்ள 5 ஆயிரத்து 233 பாடசாலைகள் உள்ளன.

மேல் மாகாணம் மற்றும் தனிமைப் படுத்தப்பட்ட பொலிஸ் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள பாடசாலைகள் இன்று திறக்கப்பட்டன. ஆரம்பப்பிரிவு பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன.

அதேவேளை, ஹற்றன் கல்வி வலயத்திலுள்ள ஹற்றன் வெளிஓயா மலைமகள் தமிழ் வித்தியாலயம், ஆக்ரோயா தமிழ் வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளும் இன்று திறக்கப்படவில்லை.

இப்பகுதிகளில் நேற்று கொரோனா தொற்றாளர்கள் மூவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனையடுத்து அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே பாடசாலைகள் திறக்கப்படவில்லை. அத்துடன், இப்பகுதிகளில் இருந்து வேறு பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களை வீட்டில் இருந்தே கல்வி நடவடிக்கைகளை தொடருமாறு கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா பனிக்கனீராவியில் விபத்து: நால்வர் படுகாயம்

வவுனியா- பனிக்கனீராவியில் இடம்பெற்ற தொடர் விபத்தில், நால்வர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, வவுனியாவில் இருந்து மரக்கறியுடன் மோட்டார் வாகனத்தில் பயணித்த இளைஞன், மாட்டுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இதனை அவதானித்த அப்பகுதியில் வசித்துவரும் மூவர், அவருக்கு உதவி செய்வதற்காக சென்ற போது வேகமாக வந்த மகேந்திரா வாகனம் நால்வர் மீதும் மோதியுள்ளது.

அதனைத் தொடர்ந்து நால்வரும் பலத்த காயங்களுடன் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பை முழுமையாக முடக்க அரசாங்கம் தயாராக இல்லை

கொழும்பில் முழுமையான முடக்கத்தை செயற்படுத்த அரசாங்கம் தயாராக இல்லை என சுகாதார அதிகாரிகளை மேற்கோளிட்டு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அவ்வாறு முடக்குவது பொருளாதாரத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதிகாரிகள் முழுமையான முடக்கத்தை அமுல்படுத்த தயாராக இல்லை என்றும் மாறாக தெரிவு செய்யப்பட்ட பகுதிகளை மட்டும் தனிமைப்படுத்துவதன் மூலம் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா தொற்று பரவலைக் கட்டுப்படுத்த கொழும்பைச் சுற்றியுள்ள எல்லைகளை தற்காலிகமாக மூட வேண்டும் என்று கொழும்பு மேயர் ரோஸி சேனநாயக்க



சமீபத்தில் முன்மொழிந்தார்.

நகரத்தை கடுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராவிட்டால், வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அதன் பிரகாரம் நகரத்திற்கு வெளியே வைரஸ் பரவாமல் தடுக்க கொழும்பில் 14 முதல் 21 நாட்கள் முடக்க வேண்டும் என்றும் இந்த காலகட்டத்தில் கொழும்புக்குள் நுழையவோ வெளியேறவோ யாரையும் அனுமதிக்கக்கூடாது என்றும் அவர் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திவிநெகும நிதி மோசடி: பசிலுக்கு விதிக்கப்பட்ட பயணத் தடை நீக்கம்



முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கு வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டிருந்த தடை கொழும்பு மேல் நீதிமன்றம் நீக்கியுள்ளது.

இதனை அடுத்து விதிக்கப்பட்ட பயணத் தடையை நீக்குமாறு அதிகாரிகளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போது, திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்துக்கு சொந்தமான நிதியை முறைகேடாக பயன்படுத்தியதாக கூறப்படும் சம்பவத்தில் அவருக்கு வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டிருந்தது.

# தப்பிக்க முயன்ற கொரோனா நோயாளி கைது

கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையிலிருந்து தப்பிக்க முயன்ற கொரோனா நோயாளி ஒருவர் வைத்தியசாலையின் பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

மேலும் இவ்வாறு தப்பிச் செல்ல முயன்றவர் 22 வயதுடைய தெமட்டகொட பகுதியைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.